# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

## *<u>மன்ற கூட்ட அழைப்பிதழ்</u>*

**************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **அவசரக் கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **பங்குனி 28**, நாள் **11–04–2022 திங்கள் கிழமை நேரம்** மாலை **4.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள “**பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்**” நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# பண்ணுருட்டி நகராட்சி

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **அவசர கூட்டம் 11–04–2022** –ந் தேதி திங்கள் கிழமை மாலை **4.00** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **அவசர கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1. பண்ணுருட்டி நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.31112/2021/அம்ரூட்–2 நாள்: 05.01.2021 குறிப்பிட்டுள்ளப்படி 15–வது நிதிக்குழு மான்யம் ஒதுக்கீட்டில் 2021–22–ல் ரூ.110 இலட்சம் (Tied Grant) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 50% திடக்கழிவு மேலாண்மை மற்றும் 50%குடிநீர் பணிகள் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட வழிக்காட்டு நெறிமுறைகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகள் துரிதமாக நடைபெற வேண்டி 2021–22–ம் ஆண்டு நிதியில் Wheeled Skid Steer Loader (54.50 Ltr) வாங்க மதிப்பீடு ரூ. 25.00 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

   மேலும் இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு 17.00 டன் மொத்த கழிவுகளில் 50% மக்கும் கழிவுகளான 8.00 டன் உருவாகின்றது. திடக்கழிவு அகற்றும் பணி மற்றும் ஈரக்கழிவுகளை பிரித்து வாங்கி நுண்ணுரம் தயாரிக்கும் பணிக்கு மொத்தம் 193 பணியாளர்கள், 5 LCV வாகனம், 30 BOV வாகனம், 2 டிப்பர் லாரி போன்றவற்றின் மூலம் தினசரி துப்புரவு பணியாளர்கள், தூய்மை பாரத இயக்க பணியாளர்கள் மற்றும் அவர்களின் மூலம் வீடுவீடாக சென்று பெறப்படும் மக்கும் கழிவுகளை 4 இடங்களில் நுண்ணுரம் தயாரிக்கும் கூடம் அமைக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றது. இந்நகராட்சியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் 689 இடங்களால் உருவாகும் கழிவுகள், கட்டுமான பணி கழிவுகள் தோட்ட கழிவுகள் சாலையோரம் குவிந்துள்ள கழிவுகளை அகற்றிடவும் குடியிருப்பு பகுதிகள் மற்றும் பிரதான சாலையோர செடி,கொடி மற்றும் புதர்கள் அகற்றிடவும், சிறப்பின வாகனங்கள் ஏதுமில்லாததால் உடன் பணி மேற்கொள்வதில் தொய்வு ஏற்படாமல் இருக்க மேற்குறிய புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வாகனம் வாங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு - 1.**மன்றம் அனுமதிக்கலாம்

   2.மேற்கண்ட செலவினத்தை 15–வது நிதிகுழு மான்யம் 2021–22ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு

**கோப்பு எண் 0084/இ1/2022**

2. பண்ணுருட்டி நகராட்சி 1 முதல் 33 வார்டுகளும் 18.03 ச.கி.மீ பரப்பளவு கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி 94.46 கி.மீ நீளம் கொண்ட 691 தெருக்களை உள்ளடக்கியது, இந்நகராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 60,100 ஆகும். இந்நகராட்சியில் குடிநீர் வினியோக பணிகள், பொதுசுகாதார பணிகள், தெருமின் விளக்கு பராமரிப்பு மற்றும் திட்டப்பணிகள் ஆய்வு மேற்கொள்ள வாகனங்கள் தேவைப்படுகிறது.

பண்ணுருட்டி நகராட்சியில் கடந்த 1994–ம் ஆண்டு வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் ஒன்றும் (TN 31A–1099) 2002ம் ஆண்டு வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் ஒன்றும் (TN 31D–9748) ஒன்றும் 2013ம் ஆண்டு வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் (TN 31 AH–7374) ஒன்றும் தற்போது உள்ளது. மேற்கண்ட வாகனங்களில் 1994 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் சுமார் 27 ஆண்டுகள் ஆகிறது. 2002ம் ஆண்டு வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் சுமார் 19 ஆண்டுகள் முடிந்த நிலையில் உள்ளதால் அவ்வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு கூடுதல் செலவுகள் ஏற்படுவதுடன் தொலைதுூரத்திற்கு எடுத்து செல்ல இயலாத நிலையில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு ஓடாமல் நின்றுவிடுகிறது.

எனவே, மேற்கண்ட இரு வாகனங்கள் வாங்கப்பட்டு முறையே 27 வருடங்கள் மற்றும் 19 ஆண்டுகள் ஆகியுள்ளதால் இரு வாகனங்களுக்கும் பயனற்ற சான்று பெற்று (Condemnation certificate) பெற்று ஏலத்தில் விடவும், 2013ம் ஆண்டு வாங்கப்பட்டு முன்னாள் நகரமன்ற தலைவர்கள் பயன்படுத்தி வந்த ஈப்பு வாகனம் பொறியாளர் பிரிவு அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தி கொள்ளவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் தற்பொழுது நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்கள் நகர பகுதிகள் முழுவதையும் பார்வையிடவும் பொது மக்களின் குறைகளை கேட்பதற்கும், நகரில் நடைபெறும் அனைத்து வளர்ச்சி பணிகளை ஆய்வு செய்யவும் புதியதாக இரண்டு எண்ணிக்கை ஈப்பு வாகனம் வாங்க வேண்டியுள்ளது. எனவே, நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறையின் பேரில் புதியதாக இரண்டு ஈப்பு வாகனம் வாங்கவும், பழைய இரண்டு ஈப்பு வாகனத்திற்கு பயனற்ற சான்று வாங்கி ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –1.</u> மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் 549/இ1/2022**

**3.** இந்நகராட்சியில் வரி இனங்கள் (சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை இனங்கள் 1146.05(இலட்சம்) வரி இனங்கள் நிலுவையாக உள்ளதை பொது

மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஒலி பெருக்கி மூலம் 33 வார்டுகளுக்கு வீட்டுவரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களை விளம்பரம் செய்ய (தனியாரிடம்) அதற்கான தோராய செலவு ரூ.25000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவுத் தொகையை வருவாய் நிதியிலிருந்து லெவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினை திறந்த வெளி கழிப்பிடமில்லா நகரமாக விளம்புகை செய்யும் பொருட்டு பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையிலான செலவினம் ரூ. 7749/— ***malar Publication*** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலக குறிப்பு: 1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

கோப்பு எண் 575 /2022/எச்2

5. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினை குப்பையில்லா நகரமாக விளம்பரம் செய்யும் பொருட்டு பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் கோரி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையிலான செலவினம் ரூ.9450— ***kal Publication*** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலக குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

கோப்பு எண் 609/2022/எச்2

6. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 1600 எண்ணிக்கையிலான 40 W குழல் மின் விளக்குகளை வெளி பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் இயக்கி பராமரிக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.957 நாள்.25.01.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டை விட)** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர், செங்கல்பட்டு. | 9.50 | 0.95 சதவிகிதம் அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருமதி.R.நவநீதம்,<br>ஒப்பந்ததாரர், கடலூர். | 9.50 | 0.32 சதவிகிதம் குறைவு |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. நவநீதம், கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.32% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ. எண்.302/ 2022 /இ2)**

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 1600 எண்ணிக்கையிலான 40W குழல் மின் விளக்கு, சோடியம் ஆவி விளக்கு 291 எண்ணிக்கையும் ஒளிர் உமிழ் விளக்குகள் 263 எண்ணிக்கை மற்றும் 8 எண்ணிக்கையில் உயர்மின் கோபுர விளக்குகளும் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிக்க போதுமான உதிரிபாகங்கள் இல்லாததால், பொதுமக்களிடமிருந்தும் நகர்மன்ற வார்டு உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே மேற்கண்ட புகார்களை சரிசெய்யவும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் மின் விளக்கு உதிரி பாகங்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோ. எண். 929

8. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 திருவதிகை ஆயில்மில் பேருந்து நிலையம் அருகில் 9 மீட்டர் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் வழங்கியிருக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.08 நாள்.14.03.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட )** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | R.A. கார்மிகா, ஒப்பந்ததாரர், காஞ்சிபுரம் | 4.50 | 0.25 சதவிகிதம் அதிகம் |
| 2 | R.A.K.இண்டஸ்ட்ரிஸ் ஒப்பந்ததாரர், சென்னை. | 4.50 | 0.05 சதவிகிதம் குறைவு |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் R.A.K.இண்டஸ்ட்ரிஸ், சென்னை. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ. எண்.70/ 2021 /இ2)**

9. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் பல்வேறு விட்டமுள்ள PVC குழாய்கள் மற்றும் G.I. குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேற்படி குழாய்கள் பதித்து சுமார் 35 ஆண்டுகள் முடிந்த நிலையில் ஆங்காங்கே குழாய்களில் பழுது ஏற்படுகின்றன. எனவே குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குவதற்கும், கோடை காலங்களில் ஏற்படும் வறட்சியை முன்னிட்டு பொதுமக்களுக்கு சீரான பாதுகாப்பான குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிடவும் 2022-23 ம் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>-1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோ. எண்.928/ 2022 /இ2)**

10. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கெடிலம் ஆற்று படுக்கையில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்தில் 15 வது நிதி 2021-22 திட்டத்தின் கீழ் பழுதடைந்த 5HP and 2HP மின்விசை மோட்டார்கள், Control panel மாற்றி அமைத்தல் மற்றும் Servicing of Human charging trolley with bearing and cremation chamber flue ducts and painting work, புதியதாக வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.946 நாள்.25.01.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | SSG Eng ,Chennai ஒப்பந்ததாரர், | 4.50 | 1.47சதவிகிதம் மிக அதிகம் |
| 2 | M.H.T Chennai ஒப்பந்ததாரர், | 4.50 | 0.14 சதவிகிதம் குறைவு |

<u>அலுவலக குறிப்பு:</u>-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M.H.T Chennai ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.14 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.0084/2022/இ1)

11. . பண்ணுருட்டி நகராட்சிக்கு 120லிட்டர் கொள்ளளவு கொண்ட PVC குப்பை தொட்டி (PVC Dust bin), 15 வது நிதி 2021–22 திட்டத்தின் கீழ் புதியதாக வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.946 நாள்.25.01.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s. பார்த்திபன் த/பெ மகாலிங்கம் , ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 3.00 | 0.20 சதவிகிதம் மிக குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர். | 3.00 | 2.04 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. பார்த்திபன் த/பெ மகாலிங்கம பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.20 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.0084/2022/இ1)

12. பண்ணுருட்டி நகராட்சிக்கு Incinerator மற்றும் Electrical எடை இயந்திரம், 15 வது நிதி 2021–22 திட்டத்தின் கீழ் புதியதாக வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.946 நாள்.25.01.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s. பார்த்திபன் த/பெ மகாலிங்கம், ஒப்பந்ததாரர் | 3.10 | 0.03 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர் கடலூர் | 3.10 | 0.67 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. பார்த்திபன் த/பெ மகாலிங்கம் பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி,

மதிப்பீட்டை விட 0.03 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்

(கோ.எண்.0084/2022/இ1)

13. பண்ணுருட்டி நகராட்சிக்கு பின்புறம் உள்ள வாகனங்கள் நிறுத்தும் shed–ல் உள்ள பழுதடைந்த சிமெண்ட Sheet–யை மாற்றி 15 வது நிதி 2021–22 திட்டத்தின் கீழ் பழுதுநீக்கி புதியதாக GI – sheet (L=39mx10m) மாற்றுதல் மற்றும் வாகனங்களுக்கு தேவையான Battery charge point அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண்.946 நாள்.25.01.2022 அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 29.03.2022 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், பண்ணுருட்டி. | 9.90 | 0.25 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர். | 9.90 | 1.84 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன், பண்ணுருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.25 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
   (கோ.எண்.0084/2022/இ1)

14. பண்ணுருட்டி நகராட்சி அலுவளக வளாகத்தில் நகரமன்ற தலைவர் அவர்களின் அறையில் பழுதடைந்த டைல்ஸ் தரைதளத்தை மாற்றி அமைத்தல், மரத்தால் ஆன தடுப்புகள் (Wooden Partition), பொய் கூரை (FALSE CEILING), புதிதாக AC UNIT நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கு ஏதுவாக PVC நாற்காலிகள் மற்றும் இதர புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஆணையாளர் நகரமன்ற தலைவர் அவர்களின் அறையில் LED TV அமைக்கவும், நகராட்சி அலுவலக சுற்றுச்சுவரில் வர்ணம் பூசி பெயர்பலகை வைக்கவும் மற்றும் அலுவலக துறை அலுவலகங்களின்

அறையில் intercom தொலைபேசி வசதி மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,

(கோ. எண். 932 / 2022 /இ1)

15. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 1600 எண்ணிக்கையிலான 40W குழல் மின் விளக்குகள் இயக்கி பராமரிக்க 02.09.2021 அன்று பணியானை வழங்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்த கால அளவு பிப்ரவரி 2022 உடன் முடிவடைவதாலும் தற்போது நகர்புற சாதாரண உள்ளாட்சி தேர்தல் நன்நடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தற்போது கோர முடியாத நிலை உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும், நகர்புற சாதாரண உள்ளாட்சி தேர்தல் நடைப்பெற உள்ளதாலும், தற்போது பணி மேற்கொண்டு வரும் திருமதி.நவநீதம் ஒப்பந்ததாரருக்கு தற்பொழுது வழங்கப்படும் அதே விலை விகிதத்தில் மேலும் ஒரு மாதம் மார்ச் 2022 மட்டும் ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோ. எண்.1477/ 2022 /இ2)

16. பண்ணுருட்டி நகராட்சி பொதுசுகாதார பிரிவு நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு மற்றும் எரியூட்டுவதற்கு மல்லிகை ஆண்கள் சுய உதவிக்குழுவிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவிற்கு ஒப்பந்தகாலம் 31.03.2022 அன்றுடன் முடிவடைவதால் புதியதாக ஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் தொகை ரூபாய் 7.00 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** **1**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**3.** மேற்காணும் பணி அத்தியாவசியமானது என்பதால் புதியதாக ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்திரவு வரையிலான காலத்திற்கு தற்போது பணி செய்து வரும் மல்லிகை ஆண்கள் சுய உதவிக்குழு தொடர்ந்து பணி புரிய அனுமதிக்கலாம்

கோப்பு எண் **904/2022/**எச்**1**

17. பண்ணுருட்டி நகராட்சிக்கு 15 CFC நிதியின் கீழ் மதிப்பீடு ரு.25.00 இலட்சத்தில் 54.50 லிட்டர் Wheeled skid steet loader வாகனம் புதியதாக வாங்குதல் பணிக்கு தமிழ் தினசரி நாளிதழான தினகுரல் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டதற்கு, தினகுரல் என்ற நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரு.36,000 /–யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பட்டியலுக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.0084 /இ1/2021)

18. தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொத்துவரி:

### குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

### குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building**) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேலும், 13.08.2008–ந் தேதிய நகர்மன்ற தீர்மான எண் 764–ல் கீழ்கண்ட விபரப்படி மண்டலம் மதிப்பு நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| வ.எண் | மண்டலம் | சொத்துவரி | காலிமனை வரி |
|---|---|---|---|
| 1 | A | 1.30 | 0.30 |
| 2 | B | 1.00 | 0.40 |
| 3 | C | 0.70 | 0.50 |

மேலும் பண்ணுருட்டி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 1.17 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.50 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 4.35 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 3.52 |
| | **மொத்தம்** | **9.54** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பண்ணுருட்டி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் வார்டு 1 முதல் 33 வரை தற்போது உள்ள சாலைகளின் மண்டலம் மற்றும் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் | சொத்து வரி | காலிமனை வரி |
|---|---|---|---|---|
| 1 | WD-01 | அழகப்பர் தெரு | ZONE-C | ZONE-A |
| 2 | WD-01 | மாரியம்மன் கோவில் தெரு | ZONE-C | ZONE-A |
| 3 | WD-01 | சிவன் படை தெரு | ZONE-C | ZONE-A |
| 4 | WD-01 | பிள்ளையார் கோவில் தெரு | ZONE-C | ZONE-A |
| 5 | WD-01 | ஜாகீர் உசேன் தெரு | ZONE-C | ZONE-A |
| 6 | WD-01 | பானுப்பிரியா நகர் | ZONE-C | ZONE-A |
| 7 | WD-01 | ராமர் லட்சுமணன் நகர் | ZONE-C | ZONE-A |
| 8 | WD-01 | லட்சுமி நகர் | ZONE-B | ZONE-B |
| 9 | WD-01 | ரங்கா நகர் | ZONE-B | ZONE-B |
| 10 | WD-01 | வேலு நகர் | ZONE-C | ZONE-A |
| 11 | WD-01 | ஸ்ரீலட்சுமி நகர் | ZONE-C | ZONE-A |
| 12 | WD-01 | சீனிவாசா நகர் | ZONE-C | ZONE-A |
| 13 | WD-02 | திரொபதி அம்மன் கோவில் தெரு | ZONE-C | ZONE-A |
| 14 | WD-02 | ராமன் தெரு | ZONE-C | ZONE-A |
| 15 | WD-02 | கோவிந்தன் தெரு | ZONE-C | ZONE-A |
| 16 | WD-02 | பொன்னப்பன் தெரு | ZONE-C | ZONE-A |
| 17 | WD-02 | தில்லை கோவிந்தன் தெரு | ZONE-C | ZONE-A |
| 18 | WD-02 | கோபால் தெரு | ZONE-C | ZONE-A |
| 19 | WD-02 | நால்வர் தெரு | ZONE-C | ZONE-A |
| 20 | WD-02 | வி பிள்ளையார் கோவில் தெரு | ZONE-C | ZONE-A |
| 21 | WD-02 | ராமலிங்க நகர் | ZONE-C | ZONE-A |
| 22 | WD-02 | ரங்கநாதன் நகர் | ZONE-C | ZONE-A |
| 23 | WD-02 | கமலம் நகர் | ZONE-C | ZONE-A |
| 24 | WD-02 | பாலகிருஷ்ணன் நகர் | ZONE-C | ZONE-A |
| 25 | WD-02 | ஆண்டிக்குப்பம் பாட்டை | ZONE-C | ZONE-A |
| 26 | WD-02 | மஞ்சினி நகர் | ZONE-C | ZONE-A |
| 27 | WD-02 | எம் பாவாடை நகர் | ZONE-B | ZONE-B |
| 28 | WD-02 | ஸ்ரீரங்கநாதன் நகர் விரிவு | ZONE-B | ZONE-B |
| 29 | WD-02 | பாலு நகர் | ZONE-B | ZONE-B |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | WD-02 | பாலாஜி நகர் | ZONE-B | ZONE-B |
| 31 | WD-02 | தங்கராசு நகர் | ZONE-B | ZONE-B |
| 32 | WD-02 | அம்பிகா நகர் | ZONE-B | ZONE-B |
| 33 | WD-03 | காந்தி ரோடு | ZONE-A | ZONE-C |
| 34 | WD-03 | ஆசாத் தெரு | ZONE-B | ZONE-B |
| 35 | WD-03 | விழமங்கலம் பாட்டை தெரு | ZONE-B | ZONE-B |
| 36 | WD-03 | விழமங்கலம் வ உ சி தெரு | ZONE-C | ZONE-A |
| 37 | WD-03 | விழமங்கலம் பாட்டை குறுக்கு தெரு-1 | ZONE-B | ZONE-B |
| 38 | WD-03 | சித்தானந்தம் நகர் | ZONE-B | ZONE-B |
| 39 | WD-03 | திருவருங்க ராமானுஜதாசன் நகர் | ZONE-B | ZONE-B |
| 40 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 1 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 41 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 2 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 42 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 3 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 43 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 4 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 44 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 5 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 45 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 6 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 46 | WD-03 | விழமங்கலம் வ உ சி நகர் 7 வது தெரு | ZONE-C | ZONE-A |
| 47 | WD-03 | விழமங்கலம் ஐய்யனார் கோவில் பாட்டை | ZONE-C | ZONE-A |
| 48 | WD-04 | காந்தி ரோடு 133-165 486-530 | ZONE-A | ZONE-C |
| 49 | WD-04 | தர்கா வண்டிமேடு | ZONE-C | ZONE-A |
| 50 | WD-04 | எஸ் ஜி தேவநாதன் தெரு | ZONE-A | ZONE-C |
| 51 | WD-04 | சண்முகம் சந்து | ZONE-B | ZONE-B |
| 52 | WD-04 | அவுலியா நகர் | ZONE-A | ZONE-C |
| 53 | WD-04 | தர்கா வண்டிமேடு 1 வது தெரு | ZONE-B | ZONE-B |
| 54 | WD-04 | தர்கா வண்டிமேடு 2 வது தெரு | ZONE-B | ZONE-B |
| 55 | WD-04 | தர்கா வண்டிமேடு 3 வது தெரு | ZONE-B | ZONE-B |
| 56 | WD-04 | தர்கா வண்டிமேடு 4 வது தெரு | ZONE-B | ZONE-B |
| 57 | WD-04 | தர்கா வண்டிமேடு 5 வது தெரு | ZONE-B | ZONE-B |
| 58 | WD-04 | தர்கா குடியிருப்பு | ZONE-B | ZONE-B |
| 59 | WD-05 | காந்தி ரோடு 71-112 531-581 | ZONE-A | ZONE-C |
| 60 | WD-05 | கஸ்தூரி பாய் தெரு | ZONE-B | ZONE-B |
| 61 | WD-05 | சோமேஷ்வரன் கோவில் தெரு | ZONE-A | ZONE-C |
| 62 | WD-05 | மாரியம்மன் கோவில் தெரு | ZONE-B | ZONE-B |
| 63 | WD-05 | பணங்காட்டு தெரு | ZONE-B | ZONE-B |
| 64 | WD-05 | பழைய மார்கெட் தெரு | ZONE-A | ZONE-C |
| 65 | WD-05 | நாடார் காலனி | ZONE-C | ZONE-A |
| 66 | WD-06 | அப்பாளு தெரு | ZONE-B | ZONE-B |
| 67 | WD-06 | தனபால் தெரு | ZONE-B | ZONE-B |
| 68 | WD-06 | மீனாட்சியம்மன் பேட்டை தெரு | ZONE-B | ZONE-B |
| 69 | WD-06 | தனபால் தெரு குறுக்கு சந்து | ZONE-B | ZONE-B |
| 70 | WD-07 | மாரியம்மன் கோவில் தெரு-2 | ZONE-B | ZONE-B |
| 71 | WD-07 | ஜவகர் தெரு | ZONE-B | ZONE-B |

| | | | | |
|---|---|---|---|---|
| 72 | WD-07 | பொன்னுசாமி தெரு | ZONE-B | ZONE-B |
| 73 | WD-07 | செக்குமேடு தெரு | ZONE-C | ZONE-A |
| 74 | WD-07 | ஜவஹர் தெரு குறுக்கு சந்து-1 | ZONE-B | ZONE-B |
| 75 | WD-07 | ஜவஹர் தெரு குறுக்கு சந்து-2 | ZONE-B | ZONE-B |
| 76 | WD-08 | சென்னை சாலை | ZONE-A | ZONE-C |
| 77 | WD-08 | ரயில்வே பீட்டர் ரோடு | ZONE-A | ZONE-C |
| 78 | WD-08 | அம்பேத்கார் நகர் | ZONE-C | ZONE-A |
